*2*

# வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக

## (ரோமர் 8)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது ஆசீர்வாதங்களை ஏராளமாகக் கொண்டுள்ளது ...*

ரோமர் 8:35-39 வசனப் பகுதியானது, வெற்றியை ஜெயங்கொள்ளுதல் பற்றிப் பேசுகிறது! அதுவே நாம் யாவரும் கேள்விப்பட விரும்பும் செய்தியாக உள்ளது. வாழ்வின் சோதனைகள் நம்மை எப்பக்கத்திலும் இருந்து நெருக்குகின்றன; நாம் வெற்றிபெற முடியாது என்பதுபோலத் தோன்றுகிறது. ஆவிக்குரிய ஒரு கருத்து நிலைப்பாட்டில்கூட, சிலவேளைகளில் நாம், வெற்றி சாத்தியமற்றதாக உள்ளது என்று உணரச் சாய்கிறோம். நாம் கிறிஸ்தவர்கள் ஆகியிருக்கிறோம், உண்மையே. ஆனால் நமது கடந்த காலத்தில் பயங்கரமான பாவங்கள் உள்ளன; நிகழ்காலத்தில், மாபெரும் சோதனைகள் உள்ளன; எதிர்காலத்தைப் பற்றி, மாபெரும் நிச்சயமற்றதன்மை நிலவுகிறது. நமது கடந்த காலத்தை விட்டு நாம் எவ்வாறு மீள முடியும்? நிகழ்காலச் சோதனைகளின் மத்தியிலும்கூட நாம் எவ்வாறு நமது விசுவாசத்தைப் பற்றிக்கொண்டிருக்க முடியும்? நாளைய தினம் கொண்டுவரக்கூடிய பிரச்சனைகளில் நாம் எவ்வாறு உயிர்பிழைத்திருக்க முடியும்? ஜெயத்தை நாம் வெற்றிகொள்வது எவ்வாறு?

இந்த வசனப்பகுதியானது, நம்மால் முடியும் என்று கூறுகிறது! இது, நாம் சோதனைகள் மற்றும் துன்பங்களுக்குத் தடுப்பாற்றலைப் பெற்றிருப்போம் என்று *கூறுவதில்லை*. ஆனால் இது, அந்த சோதனைகள் இருந்தபோதிலும், நாம் மேற்கொள்ள முடியும், நாம் வெற்றிபெற முடியும், நாம் ஜெயங்கொள்ள முடியும், நம்மால் வெற்றியாளர்களாக இருக்க முடியும் என்று *கூறுகிறது!*

உண்மையில் இது, அதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கூறுகிறது. இது, நாம் "வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக" இருக்க முடியும் என்று கூறுகிறது! மூலபாஷையில் இவ்வார்த்தை, *hupernikaw* என்பதில் இருந்து வந்ததாக உள்ளது. *Nikaw* என்ற வார்த்தை "வெற்றிகொள்ள" என்பதற்கு வழக்கமான வார்த்தையாக உள்ளது. *Huper* என்ற வார்த்தை, ஆங்கிலத்தில் "மேலான" என்ற அர்த்தம் தருவதாக, நாம் அறிந்துள்ள, "hyper" என்ற முன்குறிப்புச் சொல்லாக உள்ளது. எனவே ஒரு "மேலான செயல்பாடுள்ள பிள்ளை" என்பது "அதீத செயல்பாடுள்ள" பிள்ளையாக இருக்கிறது. இவ்வாறு, பவுல் நாம் வெற்றியாளர்களாக மாத்திரமல்ல, ஆனால் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் என்று கூறுகிறார்! நாம் "மகிமையுள்ள ஒரு வெற்றியை" ஜெயங்கொள்கிறோம் என்பதே அவர் அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும் என்பது

உறுதி.[1] மற்ற பதிப்புகள் பின்வருமாறு மொழிபெயர்க்கின்றன: "மூழ்கடிக்கச் செய்யும் ஒரு ஜெயத்தை நாம் வெற்றிகொள்கிறோம்" (Phillips); "மூழ்கடிக்கச் செய்யும் வகையிலான வெற்றி நம்முடையதாக உள்ளது" (NEB); "மூழ்கடிக்கச் செய்யும் வகையில் நாம் வெற்றியாளர்களாக இருக்கிறோம்" (NASB); "முழுமையான வெற்றியை நாம் பெற்றுள்ளோம்" (TEV); "நாம் மகிமையுடன் வெற்றிபெற்றுக் கொண்டேயிருக்கிறோம்" (Williams).

"மூழ்கடிக்கச் செய்யும் வெற்றி" என்பதன்மூலம் அர்த்தப்படுத்தப்படுவது என்ன என்பதை நாம் யாவரும் புரிந்துகொள்ள முடியும், நம்மால் முடியாதா? இது, நாம் ஒரு பந்தயத்தில், "இருபத்தி ஆறு மைல்கள் நீளமுள்ள மாராத்தான் என்று சொல்லும் ஒரு பந்தயத்தில்" கலந்துகொள்வதைப் போன்றது; மற்றும் நாம் ஜெயிக்கிறோம். நாம் சாதாரணமாக வெற்றி பெறவில்லை; நாம் பத்து மைல்களைக் கொண்டு வெற்றிபெறுகிறோம்! அல்லது நாம் ஒரு கால்பந்துக் குழுவில் விளையாடுகிறோம், மற்றும் நாம் ஜெயிக்கிறோம் - இது 14-13 கோல்கணக்கில் அல்ல, ஆனால் 99-0 கோல் கணக்கில் வெற்றி பெறுகிறோம்! இது நாம் ஒரு வியாபாரத்தில் முயற்சி செய்வதைப் போன்றது, அதைச் செய்து நாம் ஏதோ அற்ப லாபம் ஈட்டிக்கொண்டிருப்பதில்லை. நாம் கொஞ்சம் மாத்திரம் ஆதாயம் ஈட்டுவது இல்லை; நாம் ஒரு ஐம்பது லட்சம் ரூபாய்கள் ஆதாயம் ஈட்டுகிறோம்! அவ்வாறே நாம் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் வாழ்வின் சிரமங்களை வெற்றிகொள்கிறோம். நாம் ஒரு சிறு துணுக்களவில் வெற்றியாளராக இருப்பதற்கு, "மயிரிழையில்" வெற்றிபெறுவதைத் தேவன் நோக்கங்கொண்டு இருப்பது இல்லை. மாறாக, அவர் நமக்கு "மூழ்கடிக்கச் செய்யும் வெற்றி" ஒன்றைத் தருகிறார்! "நாம் மேலான வெற்றியாளர்களாக இருக்கிறோம்." கிறிஸ்தவர்கள் "வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக" இருக்கின்றனர்!

எவ்வாறு? சூழ்நிலைகளின் மீது வெற்றியை நமக்குச் சாத்தியமாக்குவதை ஏற்படுத்தும் வகையில், நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள வழிகளைப் பற்றி ரோமர் 8ம் அதிகாரம் பேசுகிறது. நாம் "வெற்றியாளர்களுக்கும் மேலான வர்களாக இருக்கிறோம்" என்று கூறமுடிவது ஏன் என்பதை மிகவும் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்காக அந்த ஆசீர்வாதங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக.

## நாம் ஆக்கினைத் தீர்ப்பின்கீழ் இராதபடியால் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:1-8)

பவுல், "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம் சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப் பில்லை" என்று கூறுகிறார் (ரோமர் 8:1). நாம் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னர், நாம் ஆக்கினைத் தீர்ப்பின் கீழ் இருந்தோம். நாம் பாவம் செய்திருந்தோம், மற்றும் பாவத்திற்கான தண்டனை நம்மீது கூறப்பட்டிருந்தது: மரணம்! (ரோமர் 6:23). நாம் மரிக்கும்படி ஆக்கினைத் தீர்ப்பிடப் பட்டிருந்தோம்! ஆனால் நாம், "கிறிஸ்து இயேசுவுக்குள்" அந்தத் தண்டனையில் இருந்து விடுதலையாக்கப்பட்டோம். நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டோம், நமது பாவங்களில் இருந்து மனந் திரும்பினோம், இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டோம்,

*மற்றும் இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றோம் (ரோமர் 6:3, 4). பின்பு நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன; நாம் மறுபடியும் பிறந்தோம் மற்றும் தேவனுடைய பிள்ளைகள் ஆனோம். தண்டனை நீக்கப்பட்டது! வேறொருவர் ஏற்கனவே தண்டத்தைச் செலுத்தியிருந்தார் என்று நாம் கற்றறிந்தோம்! நாம் பின்வரும் வார்த்தைகளைக் கேள்விப்பட்டிருந்தோம்: "குற்றம் சாட்டப்பட்ட வகையில் குற்றவாளிகள்." நாம் ஒரு மரண வரிசையில் அமர்ந்துகொண்டு, தண்டனையானது நம்மீது நிறைவேற்றப்படும் விதிவச மான நாளுக்காகக் காத்திருந்தோம். பின்பு ஒரு வரவேற்கத்தக்க செய்தி வந்தது: "நீங்கள் விடுதலை ஆனீர்களா?" இனியும் நாம் நமது பாவங்களுக்காக ஆக்கினைத் தீர்ப்பின்கீழ் இருப்பதில்லை.*

*அது, நாம் பாவத்திற்கு மறுபடியும் திரும்புதல் மற்றும் அதன் விளைவாக, நாம் தப்பித்திருந்த ஆக்கினைத் தீர்ப்பைத் திரும்பவும் அனுபவித்தல் என்பது சாத்தியமாக இராது என்று அர்த்தப்படுத்துவது இல்லை. ஆனால் அது, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் இப்போது ஆக்கினைத் தீர்ப்பின்கீழ் இருப்பது இல்லை என்று அர்த்தப்படுத்துகிறது!*

## நாம் தேவனுடைய ஆவியைக் கொண்டிருப்பதால் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:9-14)

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், பரிசுத்த ஆவியானவரை அல்லது தேவனுடைய ஆவியானவரை அல்லது கிறிஸ்துவின் ஆவியானவரைக் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்தவர்கள் ஆனபோது, நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார் (நடபடிகள் 2:38; 5:32). ஏன்? நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்ற உண்மைக்குச் சாட்சியளிக்கும்படிக்கு ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் என்பது ஒரு காரணமாக உள்ளது. ஆவியானவர், நாம் "சரீரத்தின் கிரியைகளை" அழிக்கக்கூடியவர்கள் ஆக்குகிறார் என்பது இன்னொரு காரணமாக உள்ளது (ரோமர் 8:13). பாவத்தை வெற்றிகொள்கிறவர்களாக வாழ ஆவியானவர் நமக்கு உதவுகிறார். மூன்றாவதாக, நாம் ஆவியானவர் மூலமாக மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம். மற்றும் நிறைவாக, ஆவியானவர் நம்மை, "கூறப்பட்டதைக் காட்டிலும் மேலாக உணரப்பட்ட" எவ்வித வழியிலும் வழிநடத்துவதில்லை, அற்புதமாக வழிநடத்துவதில்லை, ஆனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள வசனத்தின் மூலமாகவே விசேஷமாக வழிநடத்துகிறார்.*

*ஆனால், பரிசுத்த ஆவியானவரை நாம், ஒரு பரலோக விருந்தினர் என்ற வகையில், நமக்குள் வாசம்பண்ணுபவராக, கிறிஸ்தவ வாழ்வில் நமக்கு உதவிசெய்பவராகக் கொண்டுள்ளோம் என்ற கருத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. "ஆக்கினைத்தீர்ப்பில்லை" - மரணதண்டனை நீக்கப்பட்டுள்ளது - கடந்தகாலம் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது நாம், நிகழ்காலத்தில் தேவனுக்காக வாழ்வதற்கு நமக்கு உதவிசெய்வதற்காகத் தேவனுடைய ஆவியானவரை நமக்குள் வாசம்பண்ணப் பெற்றுக்கொண்டுள்ளோம். நாம் "வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக"*

*இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை!*

## நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதால் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:14-17)

*தேவனுடைய பிள்ளை என்று அழைக்கப்படுதல் எவ்வளவு ஆச்சரிய மான சிலாக்கியமாக உள்ளது! ஒவ்வொருவரும் நேசித்த ஒரு வயதான பிரசங்கியார், புன்னகை தவழும் முகத்துடனும், நிமிர்ந்து நிற்கும் முதுகுடனும், எதுவுமே தவறாக முடியாது என்பது போன்று உலா வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். யாரோ ஒருவர் அவரிடத்தில் ஒருமுறை, "நீங்கள் உலகத்தையே சொந்தமாகக் கொண்டவர்போலக் காணப்படுகிறீர்களே" என்று கூறினார். அதற்கு அவர், "நான் அல்ல" என்று கூறிவிட்டுச் சற்றும் இடைவெளியின்றி, "ஆனால் எனது பிதா செய்கிறார்!" என்று பதில் அளித்தார். சொல்லப்போனால், நமது பிதாவானவர் இந்த உலகத்தை சொந்த உடைமையாகக் கொண்டுள்ளார்! நாம் ஏன் மனவேதனையுடனோ அல்லது பயத்துடனோ இருக்க வேண்டும்? நாம் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தவருடைய பிள்ளைகளாக இருப்பதால், இந்த உலகத்தின் சோதனைகள் மற்றும் சிரமங்கள் ஆகியவற்றின்மீது மூழ்கடிக்கச் செய்யும் வகையிலான வெற்றியை நாம் ஜெயங்கொள்ள முடியும்!*

## நாம் தேவனுடைய சுதந்தரர்களாக இருப்பதால் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:15-17)

*நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் நாம் தேவனுடைய சுதந்தரர்களாகவும் இருக்கிறோம் என்பது தர்க்கரீதியாகப் பின்தொடருகிறது. ஒரு கோடீஸ்வரரின் பிள்ளை மற்றும் வாரிசாக இருத்தல் என்பது பெரிய விஷயமாக இராதா? எல்லாவற்றையும் உரிமை கொண்டுள்ள ஒரு தகப்ப னுக்குப் பிள்ளையாகவும் வாரிசாகவும் இருத்தல் என்பது எவ்வளவு அதிகமான மாபெரும் விஷயமாக இருக்கும்!*

*நாம் "கிறிஸ்துவுக்கு, உடன் சுதந்தரர்களாக" இருக்கிறோம் என்பதையும் கவனியுங்கள். ஆதியில் இருந்து, பூமிக்கு வந்து தெய்வீகத்தின் பல முன்னுரிமை களை அவர் தாமே வெறுமையாக்கின காலம்வரை வார்த்தையான இயேசு, தேவனுடன் கொண்டிருந்த மகிமையைக் கற்பனை செய்து பாருங்கள். பின்பு அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் தமக்கு உரிமைநிறைந்த இடத்திற்குத் திரும்பியபோது, அவர் பெற்றுக்கொண்ட வரவேற்பைக் கற்பனை செய்து பாருங்கள். அப்போது அவர் பெற்றுக்கொண்டிருந்த மகிமையும், கனமும், வல்ல மையும், மகத்துவமும் எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்! நாமும் இதே வகையிலான வரவேற்பை, இதே வகையிலான மகிமையைப் பெற்றுக் கொள்வோம் என்று இந்த வசனப் பகுதி போதிக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 3:20ஐயும் காணவும்)! அவரது சுதந்தரத்தில் நாம் பங்கடைவோம்! அப்போது நிச்சயமாகவே நாம், "வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக" இருக்கிறோம் என்று கூறமுடியும்!*

## நாம் மகிமையுள்ள ஒரு நம்பிக்கையைக் கொண்டிருப்பதால் வெற்றியாளர்களுக்கும் மேலான வர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:18-25)

இந்த வசனப்பகுதியிலோ அல்லது புதிய ஏற்பாட்டின் வேறு எந்த வசனத்திலோ கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்குப் பிரச்சனைகள் அல்லது உபத்திரவங்கள், வியாதிகள் அல்லது மரணம் என்பவற்றில் இருந்து விடுதலை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது என்று நான் மிக பலமாக வலியுறுத்த இயலாது.

அப்படியென்றால், கிறிஸ்துவுடன் சுதந்தரராக இருப்பவரும்கூட, "மாம் சத்தில் சுதந்தரராக இருப்பவர்கள் போல" எல்லா சுகவீனத்திலும் பாடுபட வேண்டுமென்றால், ஏன் கிறிஸ்தவராயிருக்க வேண்டும்? ஒரு காரணம் பின்வருமாறு: சுகவீனங்கள் கிறிஸ்தவருக்குப் புதிய அர்த்தத்தைக் கொண்டிருக்க முடியும் - அது ஒரு சாபம் என்பதற்குப் பதிலாக, ஆசீர்வாதம் என்ற வகையில் கண்ணோக்கப்பட முடியும். அது சாத்தியமாக இராவிட்டாலும்கூட, கிறிஸ்தவர், "நான் எவ்வளவு அதிகமாகப் பாடுபட்டாலும் அல்லது எவ்வளவு காலம் பாடுபட்டாலும், மேலே அங்கே எனக்காக ஒரு உன்னதமான வாழ்வு காத்திருக்கிறது. இங்கு நான் வேதனை அல்லது பாடுகள் ஆகியவற்றில் இருந்து விடுதலையை ஒருக்காலும் கண்டறியாவிட்டாலும், அங்கே அதை நான் கண்டறிவேன் - மற்றும் அந்த விடுதலை நித்தியமானதாக இருக்கும்" என்று எப்போதுமே கூர முடியும்.வேறு எந்தத் தத்துவமும் அல்லது மதமும் அந்தக் கூற்றை ஏற்படுத்த இயலாது, ஆனால் கிறிஸ்தவர் அதைக் கூற முடியும்.

## ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதால், நாம் வெற்றியாளர்களுக்கும் மேலான வர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:26, 27)

பரிசுத்த ஆவியானவர் நமக்காக என்ன செய்கிறார்? இந்த வசனப்பகுதி யானது, அவர் "வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று கூறுகிறது (ரோமர் 8:26). பரிசுத்த ஆவியானவர், தாம் வெளிப்படுத்தியுள்ள வசனத்தின் மூலமாக நமக்குச் செய்கிறதைத் தவிர, அவர் வேறு ஏதாயினும் நமக்காகச் செய்கிறார் என்பதை விசுவாசிக்காதவர்கள் உள்ளனர். ஆனால் இந்த வசனப்பகுதியானது, வெளிப்படுத்தப்பட்ட வசனமல்ல, ஆனால் ஒரு நபர் மாத்திரமே செய்யக்கூடிய சிலவற்றை அவர் நமக்காகச் செய்கிறார் என்று கூறுகிறது. இருப்பினும் இவ்வசனம், அவர் தேவனுடைய வசனத்திற்கு *நேரெதிராக* நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்று கூறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக இது, அவர் தேவனுடைய *சித்தத்தின்படியே* வேண்டுதல் செய்கிறார் என்று கூறுவதைக் கவனியுங்கள். மேலும், ஆவியானவர் நமக்குக் கொடுக்கிற விசேஷித்த உணர்வு எதினாலாவது இதை அவர் செய்கிறதில்லை, ஆனால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிகிற அதேவழியிலேயே இதை அவர் செய்கிறார் என்பது கூட்டப்பட வேண்டும்: ஏனென்றால் ஆவியானவரால் ஏவப்பட்ட வசனமாகிய வேதாகமம் நமக்கு இவ்வாறு கூறுகிறது!

*இன்னமும், ஆவியானவர் இதைச் செய்கிறார்! எவ்வாறு? மற்றும் ஏன்? இதைப்பற்றி எனது வாழ்வில் தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகச் செய்கிறார் என்பது எவ்வாறு என்று நான் நிச்சயமாக அறியாதிருப்பதைப் போன்றே, இதைப்பற்றியும் நான் நிச்சயமாக அறிந்திருப்பதில்லை. ஆனால் ஆவியானவர் இதைச் செய்கிறார் என்பதை நான் அறிகிறேன்! தேவன் நமது ஜெபங்களைக் கவனிக்கிறார் மற்றும் அவற்றிற்கு உடன்பாடான வகையில் பதில் அளிக்கிறார். கிறிஸ்து நமது மத்தியஸ்தராக இருக்கிறார் மற்றும் நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறார். ஏதோ ஒருவகையில், பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஒருவேளை அவர், நமது இருதயங்களால் கண்டறியப்பட இயலாத வார்த்தைகளை மிக ஆழந்த ஏக்கப் பெருமூச்சுகளுடன் இடுகிறார் எனலாம். எவ்வாறு? அதை நான் நிச்சயமாக அறிவதில்லை. தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய யாவரும் எனது ஜெபங்களில் ஆர்வமாக உள்ளனர் மற்றும் எனது ஜெபங்களுக்குப் பதில் அளிக்க உதவுகின்றனர் என்பதை மாத்திரம் நான் அறிகிறேன் - மற்றும் அது எனக்குப் போதுமானதாக உள்ளது! நான் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவுகிறபடியால் நான் மூழ்கடிக்கச் செய்யும் அளவுக்கு வெற்றிபெற முடியும்.*

## தேவனுடைய அருளிரக்கத்தில் இருந்து நாம் பயனடைகிறோம் என்பதால், நாம் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் *8:28*)

*வேதாகமத்தில் காணப்படுகிற மிகவும் விலைமதிப்பேறிய வாக்குத்தத்தங்களில் ஒன்று, ரோமர் 8:28ல் அடங்கியுள்ளது: "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."*

*நமக்கு நடக்கிற சகலமும் நன்மையானதாக* <u>*உள்ளது*</u> *என்று இது கூறுவதில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக இது, "தேவன், சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடப்பிக்கிறார்" அல்லது "சகலமும் நன்மைக்காக நடக்கின்றன"* (KJV) *அல்லது "நடக்கிற சகலமும் நன்மைக்கான ஒரு வடிவமைப்பில் பொருந்துகிறது"* (Phillips) *என்று கூறுகிறது.நமது வாழ்வில் அரைகுறையாகக் காணப்படுகிற - மோசமான மற்றும் நல்ல நிகழ்ச்சிகளைத் தேவன் எடுத்து, மோசமான நிகழ்வுகள் என்று தோன்றுபவற்றில் இருந்தும் கூட, அவர் சில நன்மைகளைக் கொண்டுவரும் வழியில், அவற்றை ஒன்றாக இட அவரால் முடியும். மற்றும் இவ்விடத்தில் "நன்மை" என்பது, "மகிழ்வான" அல்லது "சந்தோஷமான" என்று புரிந்துகொள்ளப்படக் கூடாது, ஆனால் தற்காலிக மாக அல்ல, நிறைவாக நன்மை என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும்; தேவனு டைய கொள்கைகளுக்கு எது நல்லதாக இருக்குமோ அது, மற்றும் நீண்ட காலத்தில் நமக்கு எது நல்லதாக இருக்குமோ, அது.*

*மேலும், இந்த வாக்குத்தத்தம் ஒவ்வொருவருக்குமானதாக* <u>*இருப்பதில்லை.*</u> *இது கிறிஸ்தவர்களுக்கானதாக உள்ளது, ஏனெனில் இந்த யுகத்தில் கிறிஸ்தவர்கள்*

மாத்திரமே ‘‘அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாக’’ இருக்கின்றனர். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இராவிட்டால், இந்த வாக்குத்தத்தத்தை உரிமைகோர முடியாது. ஆனால் கிறிஸ்தவராகுங்கள், உங்களால் முடியும்.

## நாம் இரட்சிக்கப்படும்படி முன்குறிக்கப்பட்டுள்ளோம் என்பதால், நாம் வெற்றியாளர்களுக்கும் மேலான வர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:29, 30)

நாம் இரட்சிக்கப்படும்படி முன்குறிக்கப்பட்டுள்ளோம் என்பதே இந்த வசனங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான விஷய மாக உள்ளது! சரியான முறையில் புரிந்துகொள்ளப்படும்போது, முன்குறித்தல் என்பது தன்னிலேயே ஒரு வேதாகம உபதேசமாக உள்ளது.

கால்வினீய முன்குறித்தல் உண்மையானதாக உள்ளது என்று அது அர்த்தப்படுத்துவதில்லை. கால்வினீய முன்குறித்தல் என்பது, அதைப்பற்றி நான் புரிந்துகொண்டுள்ள வகையில், உலகம் தொடங்குவதற்கு முன்னதாகவே தேவன், இரட்சிக்கப்படுபவர்கள் எல்லாரையும் பற்றிய பட்டியல் ஒன்றைச் செயல்விளைவில் தயாரித்துள்ளார் மற்றும் அந்தப் பட்டியலில் யார் உள்ளனர் என்பதை எவரொருவரும் எந்த மாற்றமும் செய்ய இயலாது என்று போதிக்கிறது. நாம் இரட்சிக்கப்படுவோமா இல்லையா என்பதற்கு நாம் உண்மையிலேயே ஒரு தேர்ந்துகொள்ளுதலைக் கொண்டுள்ளோம் என்று வேதாகமம் போதிக்கிறது, மற்றும் அந்தத் தேர்ந்துகொள்ளுதலைக் கொண்டிருத்தலைக் கால்வினீய முன்குறித்தல் மறுக்கிறது என்ற ஒரு காரணத்திற்காகவே, இந்தக் கண்ணோட்டம் புறக்கணிக்கப்பட வேண்டும்.

இருந்தபோதிலும், நாம் இரட்சிக்கப்படும்படி முன்குறிக்கப் பட்டிருக்கிறோம். எப்படி? கிறிஸ்து மூலமாகத் தேவன் மனிதர்களை இரட்சிப்பதை முன்தெரிந்துகொண்டார் என்பதை உணர்ந்தறிதல் என்பது, வேதாகமரீதியான முன்குறித்தலைப் புரிந்துகொள்வதற்கான மிகச்சிறந்த வழியாக இருக்கலாம். விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாக நாம் முடிவெடுக்கும்போது, தேவனால் முன்குறிக்கப்பட்டவர்களுக்குள் நம்மை நாமே இட்டுக்கொள்கிறோம். பின்பு நாம், இரட்சிக்கப்படும்படி முன்குறிக்கப்பட்டுள்ளோம் என்று கூறிக்கொள்ள முடியும்.

ஆனால் இவ்வசனங்கள், கோட்பாட்டு ரீதியான ஒரு சத்தியத்தைப் போதிப்பதை நோக்கங்கொண்டிருப்பதில்லை. இவைகள் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளிப்பதை நோக்கங்கொண்டுள்ளன. அதை இவைகள் எவ்வாறு செய்கின்றன? பின்வருமாறு: நமது இரட்சிப்பு தற்செயலானதல்ல, அது ஒரு திட்டத்தின்படி நடந்தது என்று இவைகள் உறுதிப்படுத்துகின்றன.

இதை விவரிப்பதற்கு: கோல்ஃ பந்து விளையாடுபவர் ஒருவர், முதல் முறை பந்தை அடிக்கும்போது வலது பக்கத்தின் முரடான இடத்தில் அடிக்கிறார். அவர் இழந்ததைத் திரும்பப் பெறுவதற்கு, நல்லதாக உள்ள ஒரு அடியை அடிக்கிறார் இடது பக்கத்தில் முரடான இடத்தில் அப்போது பந்து சென்றது. மூன்றாவது முறை அடிக்கும்போது அது பச்சைப் புல்லின்மேல் கடந்து சென்று,

பங்க்கருக்குள் போகிறது. அவரது நான்காவது அடியில் அவர் பங்க்கரிலிருந்து வெளியே அடித்து கோப்பைக்குள் விழும் வண்ணம் பந்தை அடிக்கிறார் இப்படிப்பட்ட கோல்ஃ விளையாட்டுக்காரர் சிலவேளைகளில் தவறுகளை மேற் கொண்டு கடைசியில் வெற்றிபெறுபவர் (scrambler) என்று கூறப்படுகிறார். அவர் எதிரான சூழ்நிலைகளில் இருந்து திரும்பி வருகிறார், அவர் செல்லுகையில் அதைச் செய்வதற்கு ஒரு வழியைக் கணக்கிட்டு உருவாக்குகிறார், மற்றும் இறுதி யில் தமது நோக்கத்தைச் சாதிக்கிறார். கால்பந்து விளையாட்டிலும் நாம் இதே வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். தோல்வியடைந்த நிலையில் உள்ள ஒரு விளையாட்டை எடுத்துக்கொள்ளக் கூடிய, பின்கால்பகுதியாக விளையாடுபவர், ஓடுதல் அல்லது கடத்துதலை திட்டமிடாத திசையில் பந்தை அடித்து, மேற் கொண்டு விளையாடுபவர், நல்ல scrambler என்று அழைக்கப்படுகிறார்.

தேவன் ஒரு "scrambler" ஆக இருப்பதில்லை என்று உறுதிப்படுத்துதலே ரோமர் 8:29, 30ன் கருத்தாக உள்ளது. அவர் கடந்து செல்லுகையில் சமாளிப்பான விளையாட்டை மேற்கொள்வதில்லை. அவர் தவறான அடிவைப்புகளை ஏற்படுத்தி அவற்றைத் திரும்பக் கண்டறிபவராக இருப்பதில்லை. அவர் உலகத் திற்கு இரட்சிப்பின் திட்டத்தை ஏற்படுத்தினார், மற்றும் அந்தத் திட்டம் அவர் விருப்ப நோக்கம் கொண்டிருந்தபடியே செயல்படுத்தப்பட்டது! அந்தத் திட் டத்தின் ஒரு பகுதியென்ற வகையில் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்பதே நாம் பெற்றுள்ள உறுதிப்பாடாக உள்ளது! நமது இரட்சிப்பு என்பது தேவனு டைய நித்திய நோக்கத்தின் ஒரு பகுதியாக உள்ளது! இரட்சிக்கப்படுவதற்கு நாம் முன்குறிக்கப்பட்டுள்ளதால், நாம் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம்.

## தேவன் நம்மீது அன்புகூருகிறார் என்பதால், நாம் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:31-39)

தேவனுடைய அன்பு மகாப்பெரியதாக உள்ளது: அவர் "தமது சொந்தகு மாரன் என்றும் பாராமல் இருந்தார்." தேவனுடைய அன்பு வல்லமை நிறைந்ததாக உள்ளது: "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோத மாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31). தேவனுடைய அன்பு நிலையானதாக உள்ளது: பவுல், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்று கேட்கிறார் (ரோமர் 8:36). மற்றும் அவரது பதில் பின்வருமாறு உள்ளது: "ஒருவரு மில்லை!" நமக்கும் தேவனுடைய அன்புக்கு இடையில் வர *இயலாத* விஷயங்களின் பட்டியலைக் கண்ணோக்குங்கள். வேறு ஏதாவது இத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்று நீங்கள் நினைக்க முடியுமா? சிலர் அதைச் செய்ய முயற்சிக்கலாம் என்று பவுல் முன்னெதிர்நோக்கியவராகக் காணப்படுகிறார், எனவே அவர், "பாருங்கள், நான் எந்த விஷயத்தையாவது கூறாமல் விட்டிருந்தால், அதைப் பின்வரும் வார்த்தைகளில் உள்ளடக்க விரும்புகிறேன்": "வேறெந்தச் சிருஷ்டியானாலும்" என்று கூறிமுடிக்கிறார். நமக்கும் தேவனுடைய அன்புக்கும் இடையில், சிருஷ்டிப்பில் இருந்து எதுவும், இவ்வுலகத்திலிருந்து எதுவும் வரமுடியாது!

எடுத்துக்காட்டாக, நியூக்கிளியர் யுத்தத்தின் இறையியல் மறை

கருத்துக்கள் பற்றி, நீங்கள் எப்போதாவது வியப்படைந்தது உண்டா? நியூக்கிளியர் யுத்தம் ஒன்று இருந்ததென்றால், அதைப்பற்றி மதக்கருத்துநிலையில் நாம் ஏதாவது கூற முடியுமா? வேதாகமம் அதைப்பற்றிக் குறிப்பிடுகிறதா? ஆம், இந்தச் சொற்றொடரை உள்ளடக்குவதன் மூலம் அதைப்பற்றி வேதாகமம் குறிப்பிடுகிறது: "வேறெந்தச் சிருஷ்டியானாலும்." நியூக்கிளியர் யுத்தம் அல்லது வேறெந்தப் பேரழிவு பற்றியும் நாம் ஒரு விஷயத்தைக் கூறமுடியும்: அது நடந்தாலும், தேவன் நம்மீது அன்புகூருவதை நிறுத்திவிட்டார் என்று அந்த நிகழ்ச்சி அர்த்தப்படுவதில்லை. தேவன் இன்னமும் நம்மீது அன்புகூருகிறார், மற்றும் படைப்பில் எந்த ஒரு பொருளும்/விஷயமும் அதை மாற்ற இயலாது.

## முடிவுரை

பின்வரும் உண்மையினால் நீங்கள் மனம் ஈர்க்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்: இந்த சகல ஆசீர்வாதங்களுடன், நம்மைப்பற்றி நாம், "வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக" இருக்கிறோம் என்று நினைக்க வேண்டும். நாம் மேலான வெற்றியாளர்களாய் இருக்கிறோம்! நாம் மூழ்கடிக்கச் செய்யும் வகையில் ஜெயங்கொள்கிறோம்!

அழைப்பிற்குப் பதில்செயல் செய்ய வேண்டியுள்ள நிலையில் இருப்பவர்களுக்கு நாம் என்ன கூற வேண்டும்?

முதலாவது, உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இந்த சகல ஆசீர்வாதங்கள் இருக்கும்போது அவைகள் இல்லாமல் நீங்கள் இன்னும் ஒரு வாரமோ, ஒரு நாளோ அல்லது மணிநேரமோகூட, நிலைத்திருக்க ஏன் விரும்ப வேண்டும்? கிறிஸ்தவர்கள் ஏன் வெற்றியாளர்களுக்கும் மேலானவர்களாக இருக்கின்றனர் என்பதற்கான இந்தக் காரணங்கள் யாவையும், நீங்கள் கிறிஸ்தவர் ஆவதற்கான காரணங்களாகவும் உள்ளன, அல்லது நீங்கள் ஒரு விசுவாசமுள்ள கிறிஸ்தவராக இராவிட்டால், நீங்கள் கிறிஸ்துவினிடத்திற்கு மீண்டும் திரும்புவதற்கான காரணங்களாகவும் உள்ளன.

இரண்டாவது, தேவனுடைய அன்பிலிருந்து உங்களை எதுவும் பிரிக்க முடியாது என்று நான் கூறினேன். அது மிகச்சரியாக உண்மையாயிருப்ப தில்லை. உங்களைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்கக்கூடிய இரு விஷயங்கள் இந்தப் பட்டியலில் விடப்பட்டுள்ளதைக் கவனித்தீர்களா? அவற்றில் ஒன்று *பாவம்* என்பதாக உள்ளது. பாவம் என்பது உங்களைத் தேவனுடைய பயன்நிறைந்த விளைவுகளைத் தரும் அன்பில் இருந்து பிரிக்கும். நீங்கள் பாவம் செய்யும்போதுகூடத் தேவன் உங்கள்மீது அன்பாயிருக்கிறார், ஆனால் நீங்கள் பாவத்தில் வாழத்தொடர்ந்திருக்கும் காலங்கள் முழுவதிலும் அந்த அன்பில் இருந்து பயன் அடைவதில்லை. விடப்பட்டுள்ள இன்னொரு விஷயம் *நீங்கள்* என்பதாக உள்ளது. நீங்கள் பாவத்தின் சொந்தத் தேர்ந்துகொள்ளுதல் மூலம் உங்களையே தேவனுடைய அன்பில் இருந்து பிரித்துக்கொள்ள முடியும். நீங்கள் தேவனிடத்தில் இருந்து தொலைவில் இருக்கிறீர்களா? யார் உங்களை நகர்த்தி யது? தேவன் அல்ல. நீங்களே அதைச் செய்துகொண்டீர்கள். நீங்கள் உங்களது சொந்தப் பாவத்தினால் உங்களை தேவனிடத்தில் இருந்து பிரித்துக்கொண்டீர்கள். மற்றும் நீங்கள் அவரிடத்திற்கு எவ்வாறு திரும்பி வரக்கூடும்? உங்கள் சொந்தத் தேர்ந்துகொள்ளுதலினாலேயே அதுமுடியும். தேவன் தமது அன்பில், நீங்கள் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிற ஆசீர்வாதங்களை

*ஏற்றுக்கொள்ளத் தேர்ந்துகொள்ளுதலினால் அதுமுடியும். நீங்கள் அவரிடத்திற்குத் திரும்ப முடியும். கிறிஸ்துவில் உள்ள இரட்சிப்பை ஏற்றுக்கொள்வதின் மூலம் நீங்கள் அந்த ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்வீர்களா?*

---

குறிப்பு

[1]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament* revised by William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago, Ill.: The University of Chicago Press, 1957), 849.